


# வளையாபதி

மாடர்ன் தியேட்டர்ஸ்
தயாரிப்பு...

| | |
|---|---|
| டைரக்ஷன்: | டி. ஆர். சுந்தரம்<br>எம். மஸ்தான் |
| திரைக் கதை: | மாடர்ன் தியேட்டர்ஸ்<br>கதை இலாகா |
| வசனம்: | பாரதிதாசன் |
| இசை அமைப்பு: | எஸ். தக்ஷிணாமூர்த்தி |
| பாட்டு அமைப்பு: | பாரதிதாசன்<br>கண்ணதாசன்<br>கே. டி. சந்தானம் |
| நடன அமைப்பு: | ஏ. கே. சோப்ரா<br>தண்டாயுதபாணி பிள்ளை |
| நடனம்: | சித்ரா |
| பின்னணி இசை: | டி. எம். சௌந்தரராஜன்<br>எஸ். ஸி. கிருஷ்ணன்<br>கே. ஜமுனாராணி<br>கே. ராணி<br>ஏ. ரத்னமாலா<br>ஏ. எல். ராகவன் |
| இசைக் குழுவினர்: | மாடர்ன் தியேட்டர்ஸ்<br>ஆர்கெஸ்ட்ரா |

## நடிகர்கள்

✸

| | | |
|---|---|---|
| ஜி. முத்துகிருஷ்ணன் | .... | வளையாபதி |
| கே. கே. பெருமாள் | .... | கனக வேளாளர் |
| ஏ. கருணாநிதி | .... | சாத்தன் |
| புளிமூட்டை ராமசாமி | .... | கூத்தன் |
| மாஸ்டர் ராமகிருஷ்ணன் | .... | உத்தமன் |
| மாஸ்டர் சுதாகர் | .... | அழகன் |
| எஸ். எம். திருப்பதிசாமி | .... | நாகர்தலைவன் |
| எம். இ. மாதவன் | .... | ஜோசியர் |
| எம். என். கிருஷ்ணன் | .... | கணக்கப் பிள்ளை |
| ஸி. கே. சௌந்தரராஜன் | .... | வைத்தியர் |
| ஏ. எஸ். மணி | .... | வாத்தியார் |
| எம். ஏ. கணபதி | .... | வாத்தியார் |
| கே. கே. சௌந்தர் | .... | செல்லூரான் |

## நடிகைகள்

✸

| | | |
|---|---|---|
| எஸ். ஜானகி | .... | சத்தியவதி |
| டி. ஏ. ஜெயலக்ஷ்மி | .... | அந்தரி |
| டி. பி. முத்துலக்ஷ்மி | .... | அல்லி |
| எம். எஸ். எஸ். பாக்கியம் | .... | வேம்பு |
| எஸ். ஆர். லக்ஷ்மி | .... | அல்லியின் தாய் |
| கே. டி. தனலக்ஷ்மி | .... | அருள்மொழி அம்மையார் |

# வளையாபதி

ஒன்பது கோடிப பொன்னுக்கு உரிமையாளனான வளையாபதிக்கு, மணமாகி ஆறு வருஷங்களாகியும் குழந்தை பிறக்கவில்லை. பிள்ளையில்லாக் குறையால் மனம் ஒடிந்து, மனைவி அந்தரியிடம் மனக் கசப்புற்று வாழ்ந்துவரும் நாளில், வணிக விஷயமாக மதுரை போகிறான். அங்கே, தன் நண்பர் கனக வேளாளரின் மகளும், பள்ளித் தோழியுமான சத்தியவதியை இரண்டாந்தாரமாக மணந்து வருகிறான்.

சத்தியவதியின் வருகையால் தன் செல்வாக்கு குறைந்துவிட்டதையும், வளையாபதிக்குத் தன்னிடமிருந்த அன்பு தேய்பிறையாகிவிட்டதையும் உணர்ந்த அந்தரி, சத்தியவதியை விரட்ட சதி செய்கிறாள். சத்தியவதியின் கல்யாணம் ஜாதிகெட்டதென்று கிளர்ச்சி செய்ய, தன் தம்பி சாத்தன் மூலம் ஊராரைத் தூண்டிவிடுகிறாள். ஊராருக்குப் பணிய வளையாபதி மறுத்துவிடுகிறான்........

தோல்வியுற்ற அந்தரி சோர்ந்துவிடவில்லை. வளையாபதியின் அன்பைத் தன் பக்கம் வளைக்க, தனக்குக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையை அவனுக்கு உண்டாக்க முடிவு செய்கிறாள். வைத்யனுக்குப் பணம் கொடுத்து சரி செய்து, தான் கர்ப்பமென்று வளையாபதியிடம் சொல்லச் செய்கிறாள். வைத்தியன் சொல்லை உண்மையென்று நம்பி, வளையாபதி அந்தரியிடம் வாஞ்சையாக இருக்கிறான். இந்தச் சமயத்தில் சத்தியவதி நிஜமாகவே கர்ப்பமாகிறாள். இந்தச் செய்தியறிந்த அந்தரி, சத்தியவதியை விரட்ட, ஒரு சதி நாடகத்தையே உருவாக்குகிறாள்........

ஒரு நாள் இரவு, வளையாபதி, அந்தரி அறையில் பேசிக்கொண்டிருக்கும்போது அந்தரியின் தோழி வேம்பு வந்து சத்தியவதியின் அறையில் ஆண் குரல் கேட்டதாகக் கூறுகிறாள். வளையாபதி பதைத்து ஓடுகிறான்—சத்தியவதியின் படுக்கையில் யாரோ ஒரு ஆள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து வளையாபதி ஆத்திரத்தில் கையிலிருந்த கத்தியை வீசுகிறான். முதுகில் பாய்ந்த கத்தியோடு அந்த ஆள் ஓடிவிடுகிறான். சத்தியவதியை விபசாரி என்று நம்பிய வளையாபதி, அவளை வீட்டைவிட்டு விரட்டிவிடுகிறான்—சத்யவதி தந்தையிடம் அடைக்கலம் தேடி வருகிறாள். விபசாரப் பட்டத்தோடு விரட்டப்பட்ட பெண்ணுக்கு, ஆதரவு தருவது அநீதி என்று கனக வேளாளர், மகளை விரட்டி விடுகிறார். தன் தலை விதிக்கு நொந்து தற்கொலை செய்து கொள்ள சத்யவதி ஆற்றில் விழுகிறாள். நாகர் தலைவன் ஒருவன் அவளைக் காப்பாற்றி, கற்பழிக்க முயல்கிறான். தப்பிப் பிழைத்த சத்யவதி ஒரு மூதாட்டியின் பாதுகாப்பில் காவிரிப்பூம்பட்டினத்திற்கருகில் உள்ள காட்டூர் அடைகிறாள். அவளுக்கு ஒரு குழந்தை பிறந்து "உத்தமன்" என்ற பெயரில் வளர்ந்து வருகிறான்....

தன் தம்பியின் ஆசை நாயகி அல்லிக்குப் பிறந்த குழந்தையை "அழகன்" என்றபெயரில், தனக்குப் பிறந்ததாகச், சொல்லி அந்தரி, வளர்த்து வருகிருள்.

ஆண்டுகள் பனிரெண்டு கழிகின்றன. உத்தமன் மேற்படிப்புக்கு காவிரிப்பூம்பட்டினம் வந்து, அழகன் படிக்கும் பள்ளியில் சேருகிருன். உத்தமனுக்கும் அழகனுக்கும் பாட விஷயமாகத் தகராறு வளர்ந்து, ஒரு நாள் உத்தமன் அழகனை அடித்து அவன் சட்டையைக் கிழித்து விடுகிருன். அழகனின் அக்குளில் "சூலப் பச்சை" இருப்பதைப் பார்த்து மாணவர் கேலி செய்கின்றனர். அழகன் அந்தரியிடம் வந்து, சூலப்பச்சையைக் காட்டி அழ, அந்தரியும் சாத்தனும் கள்ளிப்பால் அடித்துக் கலைக்க முயற்சி செய்கின்றனர். சூலப் பச்சை விபரத்தை வளையாபதியின் காதில் படாதபடி மறைக்கின்றனர்........

வளையாபதி அழகன் அடிபட்ட செய்தி கேட்டு, சாத்தன் பின் தொடர பள்ளிக்கு வந்து உத்தமனை அடித்து, பள்ளியைவிட்டு நீக்கிவிட ஆசிரியருக்கு உத்தரவிடுகிருன். ஆசிரியர் மூலம் சாத்தன், 'உத்தமன் சத்யவதியின் மகன்' என்ற விபரமறிந்து இருவரையும் ஒழித்துவிட முடிவு கட்டுகிருன்........

அடிபட்டு வந்த உத்தமன், வளையாபதி மீது வழக்குத் தொடுக்க விரும்பவே சத்யவதி மகனிடம் உண்மை வரலாற்றைச் சொல்லிவிடுகிருள். தன் தாய்க்கு நேர்ந்த பழியைப் போக்க, வளையாபதியை வளைய வைப்பதாக சபதம் செய்து உத்தமன் புறப்படுகிருன் தன் நண்பன் மாணிக்கம் துணையோடு உத்தமன் பல இடங்களுக்குச் சென்று சதியைக் கண்டுபிடிக்கிருன். கடைசியாக அல்லி வீட்டில் தந்திரமாக நுழைந்து சோதனை போடுகிருன்.

இதே நேரத்தில் சத்யவதியை ஒழித்துக் கட்ட அவள் இருந்த குடிசைக்கு, சாத்தன் ஆட்களை ஏவி, தீ வைக்கிருன்.

சத்யவதிக்கு என்ன நேர்ந்தது?

உத்தமனின் சபதம் நிறைவேறிற்ரு?

வளையாபதி வளைந்து கொடுத்தானு?

வெள்ளித்திரை பதில் கூறும்!

# வளையாபதி

## அந்தரி - வளையாபதி

அந் : அலை பாயும் மந்தமாருதமே—தன்னாலே
அசைந்தாடும் பூவில் விளையாடும்!
விரைந்தோடும் ஜீவநதி பாடும்!
சிறு தாரகைக் கூட்டம் போலே
மலர் மேவும் கொடி மீதே
ஆசையின் வேகம் தாளாமல் ஆடும்
அழகே ஆனந்தம்—ஓ....
அதுவே ஆனந்தம்!

வளை : அலை பாயும் மந்த மாருதமே—தன்னாலே
அசைந்தாடும் பூவில் விளையாடும் !
விரைந்தோடும் ஜீவநதி பாடும்!
எழில் வானமும் காதலாலே
கடல் சேரும் அதனாலே
ஆசையின் வேகம் தாளாமல் ஆடும்
அலையே ஆனந்தம்—ஓ....
அழகே ஆனந்தம்!

அந் : புது மணமகள் நாணம் போலே
நடை போடும் எழில் மாலை
போவதனாலே மேதினி பாடும்
இசையே ஆனந்தம்—ஓ....
இசையே ஆனந்தம்!

வளை : } இரு ஜீவன் ஒன்றியே அன்பாய்—பார் மீதே
அந் : } இணைந்தாலே வாழ்வில் சுகம் ஆகும்!
இது இயற்கை கூறும் கதையாகும்!

## அல்லி

என்னைசைக் கண்ணாளர் இவர்தாண்டி
இருக்கட்டுமே கொஞ்ச நாழி — இவர்
இருக்கட்டுமே கொஞ்ச நாழி
போ — நீ போ — நீ போ

சோழன் ஆற்றில் துள்ளுகின்ற
கெண்டை மீன் நான்
இவன் தூண்டி போட வந்தவன்தான்
போ — நீ போ — நீ போ ! (என்னைசை)

கண்ணைப் பறிச்சாண்டி அவன்
கட்டழகாலே தோழி
சுகம் காணட்டுமே கொஞ்ச நாழி
காணட்டுமே கொஞ்ச நாழி
போ — நீ போ — நீ போ ! (என்னைசை)

காட்டில் விளையாடுகின்ற
புள்ளிமான் நான்
இவன் கண்ணி வைக்க வந்தவன்தான்
போ — நீ போ — நீ போ !

## சத்யவதி - வளையாபதி

சத் : குளிர் தாமரை மலர்ப் பொய்கை கண்டேன்
எளிதோ கிடைப்பது அரிதோ
ஏழை இன்ப வாழ்க்கை
இளமை நலமடைந்திடுமோ வாழ்க்கை
இன்னல் எய்தி விடுமோ — அறியேன்

சத் : } கோடையிலே
வளை } கோடையிலே குளிர் ஓடையைக் கண்டேன்

வளை : கோடையிலே குளிர் ஓடையைக் கண்டேன்

வளை : விளையாடி வந்த அழகே அழகே
வேண்டும் எனக்கே

சத் : குளிர் தாமரை மலர்ப் பொய்கை கண்டேன்

வளை : கோடையிலே குளிர் ஓடையைக் கண்டேன்

சத் ; குளிர் தாமரை மலர்ப் பொய்கை கண்டேன்
எளிதோ கிடைப்பது அரிதோ
ஏழை இன்ப வாழ்க்கை !

## வளையாபதி — சத்யவதி

சத் : குலுங்கிடும் பூவிலெலாம் தேனருவி கண்டதனுல்
வண்டு காதலினுல் நாதா தாவிடுதே
தாவிடுதே இன்பம் மேவிடுதே

வளை : கொஞ்சிடும் அஞ்சுகமே ஓடிவந்த ஜோடிப்புரு
கூடி ஆனந்தமாய் கொஞ்சிப் பாடிடுதே
பாடிடுதே இன்பம் நாடிடுதே (குலுங்கிடும)

சத் : குளிருடன் மாலேவேளை கொள்ளும்நேசம் என்ன சொல்வேன்

வளை : மணமும் தென்றல் காற்றும் ஒன்றையொன்று மருவிடுதே

சத் : அளாவி வானத்தையே தாவுமொரு மாமரத்தை
அன்பால் முல்லைக்கொடி ஓடித்தாவிடுதே
ஆனந்தம் நாதா மேவிடுதே

வளை } குலுங்கிடும் பூவிலெலாம் தேனருவி கண்டதனுல்
சத் } வண்டு காதலினுல் ஆஹா தாவிடுதே
தாவிடுதே இன்பம் மேவிடுதே

வளை : காதலால்! இன்ப வாழ்வு கைகூடும் எவ்வுயிர்க்கும்
ஆதலாலே மயிலே

சத் : காதலால் நாமிருவர்

வளை : ஆதலாலே மயிலே

சத் : காதலால் நாமிருவர்

வளை : சேர்ந்தே இன்பமெலாம் வாய்ந்தே வாழ்ந்திடுவோம்
வாழ்ந்திடுவோம் நாமே வாழ்ந்திடுவோம்

சத் : என்போல் பாக்யவதி யாருமில்லை உலகினிலே
இன்பம் இன்பம் நம் இரண்டு மனம் ஒரு மனமே

வளை } குலுங்கிடும் பூவிலெலாம் தேனருவி கண்டதனுல்
சத் } வண்டு காதலினுல் ஆஹா தாவிடுதே
தாவிடுதே இன்பம் மேவிடுதே

## அல்லி - சாத்தன்

சாத் : அல்லி அல்லி அல்லி
அல்லி அல்லி அல்லி

அல்லி : யோ யோ யோ யோ

சாத் : ரகசியம் ரகசியம் அறைக்கு வா

அல்லி : இதெக் கொஞ்சங் கேளுங் கோ
ஓஹோ ஹோ ஹோ ஹோ
இனிமேல் ஆஹா ஹா ஹா ஹா
தனியாய் சே சே சே சே சே
மடியில் மீ மீ மீ மீ மீ
கொழந்தெ வந்தாச்சு
இதெக் கொஞ்சங் கேளுங்கோ
ஓஹோ ஹோ ஹோ ஹோ
இனிமே ஆஹா மடியில்
கொழந்தெ வந்தாச்சு

சாத் : வா....
அல்லி அல்லி அல்லி
அல்லி அல்லி அல்லி

அல்லி : யோ யோ யோ யோ

சாத் : கூப்பிட்றேனே

அல்லி . தோ வர்றேனே

சாத் : எப்பொ வர்றே ?

அல்லி : இப்போ வர்றேன்

அல்லி: பணம் கொண்டு வாருங்கோ வீணுப் போகாமே
இனிமேல் மூன்று பேர்கள் நாம்
கொழந்தெ பொறந்தா
லாலா லலா
பொன்னுலே தொட்டில் வேணும்

சாத் : கல் கண்டடி கண்ணுட்டி
சதா ஒரே சங்கடம்
பெத்துவிடு ஆணுகவே
பிள்ளையெ சீக்கிரம்
வா....
அல்லி அல்லி அல்லி
அல்லி அல்லி அல்லி

அல்லி : யோ யோ யோ யோ
நமது கண்ணன பிள்ளைக்கே
ஒரு காப்பு கொலுசு வேணுமே
சரிகையால் ஒரு சட்டை வேணுமே
தங்கச் சங்கிலி வேணுமே

சாத் : மானே மானே கேளாயோ
நானும் நீயும் நாள் தோறும்
மாலை நேரம் ஆனல் ஓடி
கொண்டாட்டமாக வாழ்வோமே நாம்
அல்லி அல்லி அல்லி
அல்லி அல்லி அல்லி

அல்லி : யோ யோ யோ யோ

## அந்தரி

எண்ணம் போலே ........ லாலல்லா
எண்ணம் போலே ........ லாலல்லா
எண்ணம் போலே வாழ்வே

இன்று கண்டேன் நானே
இணை பிரியாதே அக மகிழ்வேனே!
இந்நாளே என் பொன் நாளே !
இந்நாளே என் பொன் நாளே !

முன் போலவே மணம் நாடிடுவேன்
கண் போலவே இணைந்தாடிடுவேன்
வாடாமல் நான் சுகம் காண்பேன்
நானே சுகம் காண்பேன் (எண்ணம்)

தீர்ந்த தெல்லாம் வீண் சோகக் கதை
திரும்பியதே புது வாழ்க்கை முறை
எந்நாளும் காண்பேன் சுக வாழ்வே
காண்பேன் சுக வாழ்வே (எண்ணம்)

வாழ்க்கை யெனும் மணி மாளிகையின்
வாசலிலே இனி வேலி இல்லை
பூப் போலே நானே புது மணம் காண்பேன்
புது மணம் காண்பேன் (எண்ணம்)

## சத்யவதி

பாழான தென் வாழ்வே சதியாலே
பலியானது வஞ்சகர் மனம் போலே
மணவாளனின் துணையும் இழந்தேனே
நடமாடிடும் பிணமாய் ஆனேனே
பாழானதென் வாழ்வே

கொடுந்தூண்டிலில் வீழ்ந்த மீனெனவே
நான் துடிப்பதை யார்தான் காண்பாரே
நான் துடிப்பதை யார்தான் காண்பாரே
பாழான தென் வாழ்வே

புயல் காற்றினில் ஆடிடும் பாய்மரம் போல்
மனம் கலங்கியே உலகில் மடிவேனு
பாழான தென் வாழ்வே

(கெஜல்) **பின்னணி**

நீதியின் ஜீவன் ஓய்ந்ததோ ?
நிழலுமின்றி மறைந்ததோ ?

(பாட்டு)

உயர் நீதியின் ஜீவன் ஓய்ந்ததோ ?
நிழலுமின்றி மறைந்ததோ ?
மனம் இல்லா மாந்தர் உலகெல்லாம் நிறைந்ததாலே

காணுந் தெய்வம் தாயே என்பார் !
கவலையாலே வாட்டுவார் !
தன் நலத்தாலே தர்ம நியாயம்
இல்லா மாந்தர் புவி எல்லாம் நிறைந்ததாலே

பொய் சூது பொறாமை சூழ்ச்சியெலாம்
இங்கு நிறைந்ததனாலே தாய்க்குலமே
பெரும் வேதனைப் பாதையிலே
பெரும் வேதனைப் பாதையில் சென்றாரே
கொடும் சாவெனும் அமைதியிலே
கொடும் சாவெனும் அமைதி கண்டாரே

## நாகர் நடனம்

பெண் : ஓ........

ஆண்
பெண் } லாராரா ஓ........லாராரா ஓ........லாராரா ஓ........

ஆண் : ஹே கபடி கபடி கபடி கப பபபபபப கபகே
வா வா வா வரவா !
வேஷம் போடாதே வருவாய் தனியே
வருவாய் அருகினிலே

ஆண்கள் : தன்னாலே வருவாய் அருகினிலே

பெண் : ஹே சேரத்து ராஜா சிங்கார ராஜா
அவளா இவளா பார் !

பெண்கள் : உன் ராணி அவளா இவளா பார் !

பெண் : கண்ணாலே பாரையா ! பின்னாலே கேளையா !

பெண்கள் : மகா மகா ஆட்டந்தான் !
குவா குவா பாட்டுத்தான் !

ஆண்கள் : டிங்டகா டிங்டகா டிங்டகா டிங்டகா

ஆண்
பெண் } ஓ........ஓ........

பெண் : பார்த்தாலே போதுமா பாஞ்சால ராஜாவைப் போலவே

பெண்கள் : டிங்டகா டிங்டகா டிங்டகா

பெண் : செவ்வூரு ராஜ மகன் கண்ணாலே பாத்தா

பெண்கள் : செவ்வூரு ராஜ மகன் கண்ணாலே பாத்தா

ஆண் : கொவ்வூரு ராணி வந்து ஆடுவா

ஆண்கள் : ஆடுவா ஆடுவா ஆடுவா !

ஆண்
பெண் } ஓ ! ............

## சத்யவதி

ஆரிரோ — ஆராரோ — அமுதே
எந்தன் வாழ்வின் பாக்யமே — உறங்காய்

நாதன் அன்பே நானிழந்தேன் பாவியுமானேன்
ஒரு நாதியுமில்லேன் — உனக்காக
உயிர் வாழ்வேன்

ஆருயிரே ஆதரவே — இனி நீயே
என் கண்ணே
ஆற்ருெணுத் துயராலே மனமே
தளர்ந்தே மெலிந்தேனே

துயர் தீர்த்திடுவாயோ மகனே நீ
வளர்ந்தே தான் (ஆரிரோ)

## சத்யவதி

கள்ளங் கபடமில்லாத சிறு வெள்ளை உள்ளமே
கொண்ட பிள்ளை தனக்கே
கூறுவேனே உண்மை யாவுமே?
உண்மை யாவுமே?

எந்தன் கண்ணுளன் ஊரென்று சொல்லவா?
சொல்லி – கதியின்றி அலைந்ததும் சொல்லவா?
உள்ளம் எண்ணி எண்ணித் துயர்தனில்
வேகும் கதையால் – வெந்து
சாகும் நிலையை
சேய் மனம் துன்புற சொல்லவோ?
உண்மை சொல்லவோ?

இவன் நவகோடி நாயகன் பிள்ளைதான்
என்று – சதிகாரர் கண்டால் என் செய்வரோ?
உள்ளம் எண்ணி எண்ணித் துயர்தனில்
வேகும் கதையால் – வெந்து
சாகும் நிலையை
சேய் மனம் துன்புற சொல்லவோ?
உண்மை சொல்லவோ? (கள்ளங்)

## அழகன்

பள்ளிக்கூடம் பம் பம் பம் பம்
எல்லோரும் உல்லாசமாய்
என்னாளும் போலே விளையாடுவோம்
பள்ளிக்கூடம் பம் பம் பம் பம்

இதைவிட வேறெ ஆனந்தமே
இனி நமக்கேது எதிலும் வராது
எவருக்கும் இந்த இடம் தெரியாது
எல்லோரும் உல்லாசமாய்
என்னாளும் போலே விளையாடுவோம்

சாத்தனும் வாத்தியும் சனியனைப் போலே
பார்த்தால் எனை விட மாட்டார்
சதா வகுப்பிலே கேட்கும் கேள்வி
சரியோ தவறோ – அது சரியோ தவறோ
உடனே விரைவாய் தரணும் விடைதான்

இல்லையேல் தொடையோ முதுகோ பலிதான்
பிழையாயிருந்தால் பிரம்படி நிஜந்தான்

என்னாளும் இதுபோல் திண்டாட்டமே
படமுடியாது பலங் கிடையாது
பள்ளிக்கூடம் போனல் படிப்பும் வராது
எல்லோரும் உல்லாசமாய்
என்னாளும் போலே விளையாடுவோம்

மரத்திலே ஏறி பழம் பறிப்போம்
அந்த மாட்டை விரட்டிக் கல்லால் அடிப்போம்
துரத்தியே கழுதையைப் பிடித்திடுவோம்
அதன் தோகையில் பனைமட்டை கட்டி விடுவோம்
இதைவிட வேறெ ஆனந்தமே
இனி நமக்கேது எதிலும் வராது
எவருக்கும் இந்த இடந்தெரியாது

எல்லோரும் உல்லாசமாய்
என்னாளும் போலே விளையாடுவோம்

கஜலக்ஷ்மி பவர் பிரஸ், எக்ஸ்டென்ஷன், சேலம்.

விலை 0—1—0